# செயலாற்றுகை அறிக்கை

# 2018

## முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்


நிதி அமைச்சு
கொழும்பு 01
இலங்கை

தொலைபேசி : 011 - 2484757
தொலைநகல் : 011 - 2430270
மின்னஞ்சல் : dgms@msd.treasury.gov.lk

## பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

பொருளாதார அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு அரச துறையில் மொத்த மனித வளங்களையும் சிறந்த முறையில் முகாமை செய்யும் விசேட பொறுப்பை முதலாகக் கொண்டு 2018 ஆம் ஆண்டில் இந்நாட்டின் அரசாங்க துறையின் மனித வள முகாமை பற்றிய விசேட எதிர்கால நடவடிக்கைகள் பலவற்றை இந்த திணைக்களத்தினால் முன்வைக்கக் கூடியதாக இருந்தது. அதனூடாக படிப்படியாக கட்டியெழுப்பப்படுகின்ற அரசாங்க துறையின் உன்னதத் தன்மையின் பொருட்டு முன்னணிப் பங்களிப்பை வழங்கக்கூடியதாக இருந்தமை மிக முக்கியமான விடயமாகும்.

கடந்த வருடத்தில் அரசாங்க துறையின் மனிதவள முகாமைத்துவத்தை முறைப்படுத்தும் போது கேந்திர தகவல் தொகுதி ஒன்றை நிர்மாணிக்கும் விசேட பணியின் பொருட்டு அரசாங்க துறையின் பதவியணி பற்றிய தகவல்களை காலாண்டுக்கு ஒருமுறை இற்றைப்படுத்தி பராமரிக்க முடிந்தமை அரசாங்க துறையின் சகல நிறுவனங்களினதும் பதவியணி பற்றிய தகவல்களை அச்சு வடிவில் வெளியிடுவதற்கு முடிந்தமை மற்றும் அரசாங்க துறையின் மொத்த நிறுவன பொறிமுறையையும் மையமாகக் கொண்டு பதவியணி மீளாய்வு பற்றிய கொள்கைகளை வகுக்கக்கூடியதாக இருந்தமையும் மிக முக்கியமானதாகும்.

இந்த திணைக்களத்தின் செயற்பணியை சிறப்பாக நிறைவேற்றும் பொருட்டு உரிய வழிகாட்டல்களையும் ஒத்துழைப்பையும் வழங்கிய நிதி அமைச்சினதும் பொது திறைசேரியினதும் செயலாளர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க அவர்களினதும் பொது திறைசேரியின் பிரதி செயலாளர்கள் மற்றும் பொது திறைசேரியின் திணைக்களத் தலைவர்கள் ஆகியோருக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும், அரசாங்கத் துறையில் மனித வள முகாமைத்துவத்தில் தேவையான கொள்கைகளை தீர்மானிக்கும் பொருட்டு ஒத்துழைப்புடனும் சகவாழ்வுடனும் தொடர்ந்தும் நடவடிக்கைகளை மேற்கொண்ட அரசாங்க துறையின் சகல நிறுவனங்களுக்கும், மிகவும் அர்ப்பணிப்புடனும் குழு உணர்வுடனும் திணைக்களத்தின் செயலாற்றுகையை சிறப்பாக மேற்கொள்வதற்குப் பங்களிப்புக்களை வழங்கிய 2018 ம் ஆண்டு இத்திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றிய நிதி அமைச்சின் தற்போதைய மேலதிக செயலாளர் எச்.ஜீ. சுமனசிங்ஹ அவர்களுக்கும், இத்திணைக்களத்தின் பதவியணிக்கும் எனது பாராட்டைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதுவரை கடந்து வந்த பயணப் பாதையில் நாம் பெற்றுக்கொண்ட அனுபங்களை முதலாகக் கொண்டு மொத்த அரசாங்க சேவையையும் உன்னத நிலைக்கு கொண்டுவரும் பொருட்டு பதவியணி முகாமை, ஊழிய முகாமை மற்றும் ஆலோசனை தொடர்பான முன்னணி அரசாங்க நிறுவனமாகத் திகழ்வதற்கு சகலரினதும் ஒத்துழைப்பையும் அர்ப்பணிப்பையும் எதிர்பார்க்கிறேன்.

**தமரா டி பெரேரா**
**பணிப்பாளர் நாயகம்**

# உள்ளடக்கம்


1. நிறுவன கட்டமைப்பு ....01
2. பதவியணி முகாமை ....06
3. பணியாட்தொகுதி மீளாய்வு - 2018 ....15
4. சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் முகாமைத்துவம் ....18
5. ஆய்வு, அவதானிப்புக்களை முன்வைத்தலும் குழுப் பிரதிநிதித்துவமும் ....20
6. தாபனப் பிரிவு ....23
7. நிதிப் பிரிவு ....28

# 1. நிறுவன கட்டமைப்பு

## 1.1 அறிமுகம்

நிதி, திட்டமிடல் அமைச்சின் கீழ் 1999 ஆம் ஆண்டில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது. அன்றுமுதல் தேசிய, மாகாண, மாவட்ட மற்றும் உள்ளூராட்சி நிறுவன மட்டங்களில் அரச துறையின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவன மட்டத்தில் அவசியமான உகந்த பதவியணியினை இனங்கண்டு அவற்றிற்கான உரிய சம்பளங்களை தீர்மானித்தல் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள், அரச நியதிச்சட்ட சபைகள், முழுமையாக அரசுக்கு சொந்தமான கம்பனிகளின் ஆட்சேர்ப்பு/ பதவியுயர்வு நடைமுறைகளுக்கு அனுமதி வழங்குதல் போன்ற செயற்பாடுகளின் ஊடாக அரச துறையின் மனித வளங்களை முகாமைசெய்வதற்கு இத்திணைக்களம் உச்ச அளவில் பங்களிப்பை வழங்கியுள்ளது. இதன்போது அரச நிதி நிலைமை, அபிவிருத்திப் போக்குகள், திறமைகள் நிரம்பிய அரச சேவையை உருவாக்குதல் போன்ற துறைகளில் குறிப்பாகக் கவனம் செலுத்துவது அத்தியவசியமாகக் காணப்பட்டது. இதற்காக, காலத்தின் தேவையைப் பொறுத்து, உரிய ஏனைய நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி பதவியணி மீளாய்வுகளை மேற்கொள்வதன் மூலம் அரச துறைக்கு அவசியமான சிறந்த மனித வளங்களைப் பேணி வருவதற்கு முகாமைத்துவ சேவைத் திணைக்களம் பாரியதொரு பங்களிப்பை வழங்கியுள்ளது.

## 1.2 நோக்கு, செயற்பணி, குறிக்கோள்கள்

### நோக்கு

அரச துறையின் பதவியணி முகாமை, சம்பள முகாமை மற்றும் ஆலோசனை தொடர்பான முன்னணி அரச நிறுவனமாகத் திகழ்தல்

### செயற்பணி

அரசாங்க சேவையை உன்னத தரத்தில் கொண்டு நடாத்துவதற்கு அவசியமான சிறந்த பதவியணியை அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்குதல்

**குறிக்கோள்கள்**

அரச துறையினுள் மனித வள முகாமைத்துவத்திற்காக அடிப்படைக் குறிக்கோள்கள் சிலவற்றின் கீழ் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் இயங்கி வருகின்றது.

i. அரச சேவையின் பதவியணி முகாமை

ii. தேசிய சம்பளக் கொள்கைகளுக்கு இணங்க சம்பளங்களையும் படிகளையும் தீர்மானித்தல்.

iii. அரச துறையின் உகந்த ஆளணி தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

**1.3 கடமைப்பொறுப்புக்கள்**

(i) அரச துறைக்கு தேவையான பதவியணியினை இனங்காணுதல்.

(ii) அரச துறையிலுள்ள நிறுவனங்களின் செயற்பணிகள் மற்றும் குறிக்கோள்களின் பிரகாரம் உகந்த பதவியினரின் தேவையை அடையாளங்காணுவதன் மூலம் தொகுதி மற்றும் முறைமைகளை அறிமுகப்படுத்தும் பொருட்டு பதவியினர் மீளாய்வுகளை மேற்கொள்ளுதல்.

(iii) அரச துறையிலுள்ள நிறுவனங்களின் இல்லாதொழிக்கப்பட வேண்டிய பதவிகளையும் பதவித் திருத்தங்களையும் அடையாளங்கண்டு புதிய பதவிகளை உருவாக்குதலும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதி வழங்குதலும்.

(iv) அரசாங்கத்தின் கருத்திட்டங்களுக்கான பதவியினர் அனுமதி வழங்குதலும் சம்பளங்களை நிர்ணயித்தலும்.

(v) அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், முழுமையாக அரசுக்கு சொந்தமான கம்பனிகளின் ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறை மற்றும் பதவியுயர்வு நடவடிக்கைமுறை என்பவற்றுக்கான அனுமதியை வழங்குதலும்.

(vi) பதவியினரின் தேவையை கவனத்திற்கொண்டு தகுதிறன்களையும் தரங்களையும் மேம்படுத்துதல் / அரச துறையின் பதவிகளுக்கான தகுதிநிலைகளையும் தரங்களையும் மேம்படுத்துதல்.

(vii) மேலதிக ஊழியர் தொகைகளை அடையாளம் காணுதல், அவர்களை மீண்டும் பயனுள்ளவாறு சேவையில் ஈடுபடுத்துதல், சேவைகளை திருத்தவதற்கும் இடைநிறுத்துவதற்கும் முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தல்.

(viii) பௌதிகச் சூழலை மேம்படுத்துவதற்கான தேவைகள், இயந்திரமயப்படுத்த / தன்னியக்கமயப்படுத்த வேண்டிய, கணனிமயப்படுத்த வேண்டிய மற்றும் வெளியிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய துறைகளை அடையாளம் காணுதல்.

(ix) சேவைப் பிரமாணக் குறிப்புக்களினதும் சேவை நிபந்தனைகளினதும் அபிவிருத்தித் தேவைகள் பற்றிய கவனத்தைச் செலுத்தி ஆய்வுகளில் ஈடுபடுதல் / மீளாய்வு செய்தல்.

(x) அரச துறையிலிருந்து ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களை மீண்டும் சேவையில் அமர்த்துதல், ஆலோசகர்களைப் பணிக்கமர்த்துதல் தொடர்பான அமைச்சரவை முன்மொழிவுகளை சிறந்த முறையில் ஆராய்ந்ததன் பின்னர், அது பற்றிய பரிசீலனைகளை மேற்கொண்டு உரிய சிபாரிசுகளை முன்வைத்தல்.

(xi) அரச மற்றும் மாகாண அரச சேவைகளின் பதவியணி தொடர்பான தகவல் தொகுதிகளைப் பேணிவருதல்.

(xii) ஆட்சேர்ப்புக் கொள்கைகள், திறன் விருத்திப் பயிற்சிகள் மற்றும் திட்டமிடல் ஒழுங்குமுறை என்பன தொடர்பான விடயங்களை நடைமுறைப்படுத்தும் நோக்கில் உரிய அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

(xiii) அரச துறையின் சம்பளங்கள், ஊக்குவிப்புக் கொடுப்பனவுத் திட்டம், நலன்புரித் திட்டம் மற்றும் அதுபோன்ற ஏனைய ஊதிய முன்மொழிவுகளின் முகாமைத்துவம் மற்றும் அரச துறையிலிருந்து ஓய்வுபெறச் செய்வதன் நன்மை பற்றிய திட்டம் பற்றி ஆராய்தலும் அவதானிப்புகளை வழங்குதலும்.

(xiv) அரச நிறுவனங்களை மீள்கட்டமைப்புச் செய்தல் மற்றும் அளவுமயப்படுத்தல் நோக்கத்துடன் அரச துறை நிறுவனங்களின் பணிகளை இரட்டைத்தன்மைப்படுத்தலை இனங்காணுதல்.

(xv) மாகாண சபை மற்றும் மாகாண அரச நிறுவனங்களின் நிறுவனரீதியான மீளாய்வு. பதவியினர் முகாமைத்துவம், சம்பளம் பற்றிய ஆலோசனைச் சேவைகள் என்பவற்றை வழங்குதல்.


(xvi) காலாண்டு அடிப்படையில் இற்றைப்படுத்திய ஆளணி பற்றிய அறிக்கைகளை அமைச்சரவைக்கு சமர்ப்பித்தல்.

(xvii) அரச சேவையின் பதவியணி தொடர்பான ஆண்டறிக்கையை தயாரித்து வெளியிடல்.

(xviii) அரச சேவையின் பதவியணி தொடர்பான மற்றும் அப்பதவியணியின் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் சம்பந்தமான ஆண்டறிக்கைளை தயாரித்து வெளியிடல்.

## 1.4 கட்டமைப்பு

### முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்



## 1.5 பிரதான பிரிவுகள்

I. அரச நிறுவனங்கள் மற்றும் அரச நியதிச்சட்ட சபைகளுக்குறிய பதவியணிகளுக்கான அனுமதி வழங்கும் பிரிவு
II. அமைச்சரவை பிரிவு
III. தகவல் தொழில்நுட்ப பிரிவு
IV. ஆட்சேர்ப்பு நடைமுறைவிதிகள் பிரிவு
V. தகவலறியும் சட்ட பிரிவு
VI. நிர்வாக பிரிவு
VII. கணக்குகள் பிரிவு

# 2. பதவியணி முகாமை

## 2.1 **அறிமுகம்**

அரச துறையின் மனித வள முகாமையில், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பிரதான வகிபாகம் பின்வருமாறு.

- பதவிகளுக்கு அனுமதி வழங்குதல்
- பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதி வழங்குதல்
- பதவிகளை இல்லாதொழித்தல்.
- பதவிப் பெயர்களைத் திருத்துதல்
- அரசாங்கச் செயற்திட்டங்களுக்கான பதவியணிக்கு அனுமதி வழங்குதலும் சம்பளங்களைத் தீர்மானித்தலும்
- அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், முழுமையாக அரசுக்கு சொந்தமான கம்பனிகளின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டங்களுக்கான நடைமுறை விதிகளை அனுமதித்தல்.

அரச துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை உரிய விதத்தில் மேற்கொள்வதற்கு, தேவையான சிறந்த மட்டத்தில் ஊழியர் எண்ணிக்கையைப் பேணி வருவது அவசியமாகும். அதன் அடிப்படையில் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி இலக்குகள் மற்றும் அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள், உள்;ராட்சி மன்றங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் முழுமையாக அரசுக்கு சொந்தமான கம்பனிகள் மற்றும் அரசாங்கச் செயற்திட்டங்கள் என்பவற்றில் காலத்துக் காலம் எழுகின்ற மனித வளத் தேவைகளை கவனத்தில் எடுத்து நிறுவனங்களில் போதியளவு ஊழியர் எண்ணிக்கையைப் பேணி வருவதற்கான தனது பணிகளை முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் 2018 ஆம் ஆண்டில் சிறப்பாக நிறைவேற்றியது.

## 2.2 நிருவாக மட்டத்திற்கேற்ப அரச துறையில் சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள்

அரச துறை ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 2018.12.31 ஆம் திகதிக்கு 1,370,633 ஆகும். அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள், பாதுகாப்புப் பிரிவுகள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் முழுமையாக அரசுக்கு சொந்தமான கம்பனிகள், அரச வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் உள்ளிட்ட அரச தொழில் முயற்சியாண்மைகள் என்பவற்றைக் கொண்ட அரச துறையின் மொத்த ஊழியர் குழாத்தின் உள்ளடக்கம் கீழே அட்டவணை 2.1 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.1 : அரச துறை ஊழியர்கள் - 2018**

| நிருவாக மட்டம் | அனுமதிக்கப்பட்ட பணியாட்தொகுதி | உண்மையான பணியாட்தொகுதி |
|---|---|---|
| தேசிய மட்டம் | 892,509 | 742,960 |
| மாகாண சபைகள் மற்றும் உள்;ராட்சி நிறுவனங்கள் | 440,560 | 392,528 |
| மொத்த அரச ஊழியர்கள் | **1,333,069** | **1,135,488** |
| அரச தொழில்முயற்சிகள் மற்றும் வங்கிகள் | 248,625 | 235,145 |
| மொத்த அரச ஊழியர் துறை | **1,581,694** | **1,370,633** |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

## 2.3 அரச சேவையின் பதவியினர் முகாமை - 2018

பொது மக்களுக்கு வினைத்திறன்மிக்கதும் பயனுறுதி வாய்ந்ததுமான அரச சேவையினை வழங்கும் நோக்கில் அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்;ராட்சி மன்றங்கள் உள்ளிட்ட அரசாங்கத் துறையில் 2018 ஆம் ஆண்டில் போதியளவில் ஊழியர் எண்ணிக்கையைப் பேணி வருவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்தது.

### 2.3.1 புதிய பதவிகளை உருவாக்குதல் - 2018

புதிதாகப் பதவிகளை அனுமதிக்கின்ற போது தொடர்புடைய நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகள், நாட்டின் நிதி நிலைமை மற்றும் பதவிகளை உருவாக்குவதற்கான காலத்தின் தேவை என்பன கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த தசாப்தத்தின் அரச துறையின் பதவியணி பற்றிய தகவல்கள் அட்டவணை 2.2 இல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.2** அரச துறையிலுள்ள பதவியணி வகையீடு **2009 -2018**

| நிருவாக மட்டம் | | வருடம் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | **2009** | **2010** | **2011** | **2012** | **2013** | **2014** | **2015** | **2016** | **2017** | **2018** |
| தேசிய | அனுமதிக்கப்பட்ட | 680,442 | 698,335 | 705,331 | 710,909 | 796,266 | 844,948 | 858,680 | 874,046 | 880,971 | 892,509 |
| | உண்மையான | 607,717 | 643,748 | 443,399 | 661,837 | 683,719 | 703,600 | 722,950 | 754,548 | 756,339 | 742,960 |
| மாகாண சபைகள் மற்றும் உள்;ராட்சி நிறுவனங்கள் | அனுமதிக்கப்பட்ட | 364,396 | 367,207 | 367,730 | 385,562 | 391,647 | 392,698 | 394,812 | 412,560 | 428,433 | 440,560 |
| | உண்மையான | 296,714 | 332,107 | 363,248 | 378,933 | 375,752 | 377,445 | 374,330 | 372,033 | 385,311 | 392,528 |
| மொத்த அரச சேவை | அனுமதிக்கப்பட்ட | **1,044,838** | **1,065,542** | **1,073,061** | **1,096,471** | **1,187,913** | **1,227,646** | **1,253,492** | **1,286,606** | **1,309,404** | **1,333,069** |
| | உண்மையான | **904,431** | **957,855** | **1,006,647** | **1,040,770** | **1,059,41** | **1,081,045** | **1,097,280** | **1,126,581** | **1,141,650** | **1,135,488** |
| அரச தொழில் முயற்சியாண்மை மற்றும் வங்கிகள் | அனுமதிக்கப்பட்ட | 227,224 | 227,792 | 228,326 | 245,100 | 245,687 | 245,339 | 244,800 | 234,220 | 242,194 | 248,625 |
| | உண்மையான | 234,547 | 236,121 | 236,543 | 239,079 | 239,058 | 221,213 | 219,583 | 226,695 | 233,849 | 235,145 |
| மொத்த அரச துறை | அனுமதிக்கப்பட்ட | **1,272,072** | **1,293,334** | **1,301,387** | **1,341,571** | **1,433,60** | **1,682,985** | **1,498,292** | **1,520,826** | **1,551,598** | **1,581,694** |
| | உண்மையான | **1,138,978** | **1,211,976** | **1,243,190** | **1,279,849** | **1,298,59** | **1,302,258** | **1,316,863** | **1,353,276** | **1,375,499** | **1,370,633** |
| அனுமதிக்கப்பட்ட பதவியணிப் பயன்பாடு (மூ) | | 90 | 94 | 96 | 95 | 91 | 88 | 88 | 88 | 88 | 86 |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

அதன் பிரகாரம் அரச துறையில் விரிவடைகின்ற சேவையின் தேவைகளுக்கு இணங்கியதாக 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2018 ஆம் ஆண்டில் அரச துறையில் அனுமதிக்கப்பட்டுள்ள பதவியணி 34% சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும், ஆட்சேர்ப்புக்கும் ஓய்வுபெறுவதற்கும் இடையிலான இடைவெளி அதிகரித்ததனால் 2018 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்டுள்ள பதவியினரில் உண்மையாகப் பயன்படுத்தப்பட்டிருப்பது நூற்றுக்கு எண்பத்தி எட்டு (86%) மாத்திரமேயாகும். அட்டவணை 2.2 இன் பிரகாரம் 2009 முதல் 2018 வரையான பத்து வருடத்தினுள் அனுமதிக்கப்பட்டுள்ள பதவியினரில் கூடுதலான பயன்பாடு காட்டப்பட்டிருப்பது 2011 ஆம் ஆண்டிலேயாகும்.

### 2.3.2 பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதி வழங்குதல் மற்றும் பதவிகளை இல்லாதொழித்தல்

முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைகள் இலக்கம் 03/2014 ஏற்பாடுகளின் பிரகாரம் அரசாங்க சேவைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் உள்ளிட்ட மாகாண அரச சேவையில் ஏற்படக்கூடிய பதவி வெற்றிடங்களை நிரப்பும் பணியைக் குறித்த நிரல்இ அமைச்சுக்களின் செயலாளர்களின் / மாகாண பிரதம செயலாளர்களின் முன் அனுமதியின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய அதேவேளையில், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் முழுமையாக அரசுக்கு சொந்தமான கம்பனிகள் ஆகியவற்றில் ஏற்படக்கூடிய வெற்றிடங்களை நிரப்பும் பணியை சேவையின் தேவையை கவனத்திற்கொண்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைகள் இலக்கம் 03/2018 ஏற்பாடுகளின் பிரகாரம் அரசாங்க சேவைகள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் அணைத்து பதவி வெற்றிடங்களையும் நிரப்புவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியினை பெற வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 2.3.3 கருத்திட்டப் பதவியணி மற்றும் சம்பள முகாமைத்துவம்.

தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் நாட்டில் அமுலாக்கப்படும் பல்வேறு அபிவிருத்தி கருத்திட்டங்களைத் திட்டமிட்ட கால எல்லைகளுக்குள் பூர்த்தி செய்வதற்கு அவசியமான பதவியினருக்கு அனுமதி வழங்குதல், அப்பதவிகளுக்கான சம்பளங்களைத் தீர்மானித்தல் என்பன **2007.04.05** ஆந் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைக்கு இணங்க **2007** ஆம் ஆண்டு முதல் **2016** ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்டுள்ளன. அபிவிருத்தி முன்னுரிமைகளின் அடிப்படையில் இலக்குவைக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளை இலகுபடுத்தும் பொருட்டு அறிவையும் அனுபவத்தையும் கொண்டுள்ள தொழில்வல்லுநர்களின் உற்பத்தித்திறன்மிக்க சேவையொன்றைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு கருத்திட்டப் பதவியினர் பதவிகளையும் சம்பளங்களையும் திருத்தி **2016.03.24 ஆம் திகதிய 01/2016ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. அதன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில்** இச்செயற்பாடுகளை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கு குறித்த அபிவிருத்திக் கருத்திட்டங்கள் அமுலாக்கப்படும் நிரல் அமைச்சுக்கள் / மாகாண சபைகள், வெளிநாட்டு வளங்கள் திணைக்களம், தேசிய திட்டமிடல் திணைக்களம், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வைத் திணைக்களம் என்பன முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சிறந்த முறையில் ஒத்துழைப்பு வழங்கின.

அட்டவணை 2.3 கருத்திட்டப் பதவியினருக்கு அனுமதி வழங்கல்

**Table 2.3. Approval for Project Staffs – 2018**

| Serial No. | Project | Number of Posts Approved during the year 2018 | Total Number of Approved Posts |
|---|---|---|---|
| | **Ministry of Mahaweli Development and Environment** | | |
| 01. | World Bank Funded Eco-System Conservation & Management Project. | | 32 |
| 02. | Construction of Solid Waste Disposal Facilities Project. | 01 | 20 |
| 03. | Pilisaru Project. | 01 | 38 |
| 04. | Community Forest Management Programme in Sri Lanka | | 03 |
| 05. | 1.– Project on mainstreaming agro – biodiversity conservation and use in Sri Lanka agro – ecosystems for livelihoods and adaptation to climate change.<br>2. Project on mainstreaming biodiversity conservation and sustainable use for improved human nutrition and well – being. | | 06<br>09 |
| 06. | Programme for the management of hazardous waste and chemical emitted to the environment Sri Lanka. | | 10 |
| 07. | Enhancing Biodiversity Conservation & Sustenance of Ecosystem Services in Environmentally Sensitive Areas Project. | | 09 |
| 08. | Sanitary Waste Land Filling Project – Dompe | | 18 |
| 09. | Project on Preparation of Sri Lanka's Third National Communication to the United Nations Framework Convention on Climate Change. | | 07 |
| 10. | Uma Oya Multipurpose Development Project. | 01 | 310 |
| 11. | Addressing Climate Change Impact on Mitigation Agriculture Communities Living in Mahaweli River Basing in Sri Lanka. | | 10 |
| 12. | Strengthening Capacity to Control the Introduction and Spread of Invasive Alien Species in Sri Lanka. | | 09 |
| 13. | Dam Safety & Water Resources Planning Project. | | 366 |
| 14. | Mahaweli Water Security Investment Programme Tranche 2 | | 185 |
| 15. | Maduru Oya South Bank Development Project | | 11 |
| 16. | Exploration and Assesment of Gem Deposit in Sri Lanka. | | 22 |
| 17. | Strength the Resilience of Smallholder Farmers in the Dry Zone to Climate Variability and Extreme Event through an Integrated Approach to Water Management Project. | | 29 |
| 18. | Moragahakanda – Kalu Ganga Development Project. | 01 | 535 |
| | **Ministry of Defence** | | |
| 01. | Defence Headquarters Complex Project, Akuregoda. | 01 | 2058 |
| | **Ministry of Megapolis and Western Development** | | |
| 01. | Trincomalee District Master Plan Programme. | 01 | 17 |
| 02. | Colombo International Finance City Project. | 06 | 34 |

| | | | |
|---|---|---|---|
| 03. | Light Rail Transit Project. | 03 | 109 |
| 04. | Tech City Development Project. | 07 | 38 |
| 05. | High – Rise Office Complex at Sethsiripaya Premises (Sethsiripaya Stage - III) | 40 | 40 |
| **Ministry of Provincial Councils and Local Government.** | | | |
| 01. | Transport Connectivity and Asset Management Project. | 24 | 24 |
| 02. | Local Government Support Project. | 06 | 06 |
| **Ministry of Health, Nutrition & Indigenous Medicine.** | | | |
| 01. | Improvement of Basic Social Services Targeting Emerging. | | 12 |
| 02. | Family Study Project for Dengue Vaccination Project | 22 | 22 |
| 03. | Second Health Sector Development Project. | | 17 |
| 04. | Global Fund to Fight Aids, Tuberculosis & Malaria. | | |
| 05. | Maternity Hospital Mahamodara Galle Constructing Project | | 08 |
| 06. | Health System Enhancement Project. | 42 | 41 |
| 07. | Health & Medical Service Improvement Project. | 15 | 19 |
| 08. | Primary Health Care Systems Strengthen Project. | 12 | 12 |
| 09. | Medical Supplies Management Information System. | 20 | 20 |
| 10. | Volbachiya Project for Dengue Combatting | 48 | 48 |
| **Ministry of City Planning, Water Supply and Higher Education.** | | | |
| 01. | Task Force on Resettlement of Protracted IDPs in the Northern Province. | 51 | 51 |
| 02. | Science and Technology Human Resources Development Program. | 42 | 42 |
| 03. | Project for Establishment of Research and Training Complex at the Faculty of Agriculture – University of Jafna. | 01 | 09 |
| 04. | Wayamba University Township Project. | 17 | 17 |
| 05. | World Bank Funds Accelerating Higher Education Expansion and Development Project. | | 33 |
| 06. | Development of the Faculty of Health Care Sciences, Eastern University of Sri Lanka. | | 15 |
| 07. | Township Development Program of the University of Sri Jayawardhanapura | | 08 |
| 08. | Knowledge Society Project. | | 03 |
| 09. | Institute of Technology, University of Moratuwa. | | 18 |
| 10. | South Eastern University Development Project. | | 08 |
| 11. | Pipe Borne Server Coverage to Rathmalana Moratuwa & Ja – Ela / Ekala areas. | 20 | 20 |
| 12. | Laggala & Wilgamuwa Water Supply Project. | Laggala 11<br>Wilgamuwa 11 | Laggala 11<br>Wilgamuwa 11 |
| 13. | Colombo District Water Supply Project. | 39 | 85 |
| 14. | China Sri Lanka Research Government Project. | 03 | 03 |
| 15. | Water Supply & Sanitation Improvement Project. | 60 | 60 |
| **Ministry of Irrigation, Water Resource and Disaster Management.** | | | |
| 01. | Kalugaloya Reservoir Project. | 04 | 28 |
| 02. | Lower Malwathu Oya Reservoir Project. | 19 | 19 |
| 03. | Productivity Encasement and Irrigation Network | 49 | 49 |

| | | | |
|---|---|---|---|
| | Rehabilitation Project | | |
| 04. | Mundeni Aru Basin Development Project. | 12 | 30 |
| 05. | Mahaweli Left Bank Lower Basin Development Project (Kinniya and Kantale Areas) | 23 | 38 |
| **Ministry of Highways & Road Development.** | | | |
| 01. | Second Inergranted Road Investment Program – Eastern Province. | 26 | 26 |
| 02. | Second Inergranted Road Investment Program – Western Province. | 21 | 21 |
| 03. | Second Inergranted Road Investment Program – Uva Province. | 24 | 24 |
| 04. | Second Inergranted Road Investment Program – Northern Province. | 33 | 33 |
| 05. | Exim Bank of China funded widening & improvement of 64.31km roads in Central & Uva Province. | 33 | 49 |
| 06. | New Kelani Bridge – Athurugiriya Elevated Highway Project. | 11 | 27 |
| **Ministry of Education.** | | | |
| 01. | Nearest School is the Best School. | 09 | 256 |
| 02. | Technical, Educational, Development Project. | 18 | 18 |
| **Ministry of Plantation Industries.** | | | |
| 01. | Smallholder Tea & Rubber Revitalization Project. | 00 | 131 |
| **Ministry of Ports Shipping and Southern Development.** | | | |
| 01. | Rehabilitation of Kankasanthurai Harbour | 10 | 10 |
| 02. | Lagoon Development Project | 27 | 27 |
| 03. | Northern Province Substainable Fisheries Development Project | 07 | 12 |
| **Ministry of Transport and Civil Aviation.** | | | |
| 01. | Matara – Beliatta – Railway Project. | | 53 |
| 02. | Colombo Suburban Railway Project. | 51 | 77 |
| 03. | Kurunegala – Habarana Railway Line Via Dambulla. | | 31 |
| 04. | Procurment of out sourcing of heavy repairs to 200 No. Passenger Coaches. | | |
| 05. | Bandaranayake International Airport Development Project. | | 45 |
| **Total Approved Posts** | | **883** | **5,552** |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

# 3. பணியாட்தொகுதி மீளாய்வு - 2018

### 3.1 அறிமுகம்

அரசாங்கத்தின் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு இயலுமான வகையில், அரச துறையின் பணியாட் தொகுதியினர் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றனர். சேவையொன்றை உருவாக்குகின்ற சந்தர்ப்பத்தில் அல்லது அதற்குப் பின்னர் பணியாளர் தொகையில் நிலவுகின்ற முறையாக இனங்காணப்பட்ட குறைபாடுகள் நீங்கும் முறையிலும் நிறுவன செயற்பாடுகள், கட்டமைப்பு மற்றும் நிறுவனங்களுக்கு தனிப்பட்ட ரீதியில் கருத்திற்கொள்ளப்படும் செயற்பாடுகளின் தேவைகளை இந்த பணியாட்தொகுதியினரின் ஊடாக பூரணப்படுத்திக்கொள்வதை உறுதிப்படுத்திக்கொள்ளும் வகையிலும், அரச துறையின் பணியாளர் தொகையை மீள்கட்டமைப்புச் செய்யும் நோக்கில் 01/2017 ஆம் இலக்கத்தைக் கொண்ட 2017.01.11ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

அரச நிறுவனங்களில் சேவைகள் வழங்குகையை சிறப்பானதாக விரிவுபடுத்தும் நோக்கத்துடன் 2018 ஆம் ஆண்டில் பணியாட்தொகுதி மீளாய்வின் ஊடாக இலங்கையின் அரச சேவையின் மனித வளங்களின் நிகழ்கால நிலைமை இயல்பாக ஆராயப்பட்டது. பணியாட்தொகுதி மீளாய்வின் மனித சக்தியின் கணிப்பு மற்றும் அறிவியல் முறைமைக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு மேற்கொள்வதற்கு சமமானவாறு நிகழ்காலத்தில் நிலவுகின்ற பணியாட்தொகுதியின் சேவை வழங்கல்கள் மேற்கொள்ளப்படுவது வினைத்திறன், பணியாளர் உந்துதல் மற்றும் பயனுறுதி போன்ற ஆரம்பத்தில் இனங்காணப்பட்ட அளவுகோல்களுக்கு இணங்கவா என்பது தொடர்பில் அதிக கவனத்தைச் செலுத்தி ஆய்வொன்றை மேற்கொள்வதாகும்.

முக்கியமாக பணியாட்தொகுதியினரின் மீளாய்வின் பிரதான நோக்கம் பின்வருமாறு.

- இனிவரும் 5 வருட காலத்துக்கு அறிவியல் அடிப்படையில் மனித வலுத்தேவையை கணிப்பிடுதல்
- நிறுவனத்தின் பொருட்டு வர்த்தமானியிடப்பட்ட செயற்பாடுகள் மற்றும் செயற்படுத்தப்படும் செயற்பாடுகள் போன்றவற்றுக்கிடையில் ஏதேனும் மாற்றங்கள் காணப்படுகின்றதா என்பது தொடர்பாக பரீட்சித்தல்
- அவ்வாறு மாற்றங்கள் காணப்படின் அந்தச் செயற்பாடுகள் இரட்டைத்தன்மையானவை என இனங்காணல்
- பதவியுயர்வுக்கான தடங்கல்களைத் தடுத்தும், ஒரே சேவையினுள் பதவியுயர்வுகளுக்கிடையே இடைவெளி ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் எதிர்கால ஆட்சேர்ப்புச் செய்வதைத் திட்டமிடல்
- உறுப்பினர்களுக்கு உரித்தான தொழில்சார் சட்டரீதியான விருப்பங்களுடன் கடமைத் தேவைகளுக்கு இணங்கும் வகையில் பணியாட்தொகுதியை மீள்கட்டமைப்பு செய்தல்
- சேவைகளின் பயனுறுதியை அதிகரித்தல்.

அதற்கேற்ப, சகல அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்;ர் அதிகார நிறுவனங்களின் பணியாட்தொகுதி மீளாய்வை மேற்கொண்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், இனங்காணப்பட்ட உகந்த பணியாட்தொகுதியினர் அது தொடர்பில்

பொறுப்பேற்கும் தரப்பான முகாமைத்துவ சேவைகள் திணைக்களம், தேசிய சம்பளம் மற்றும் ஆளணி ஆணைக்குழு மற்றும் நிதி ஆணைக்குழு போன்ற நிறுவனங்கள் இணைந்து தீர்மானித்துள்ளது.

2018.12.31. ஆம் திகதியில் உள்ளவாறு இலங்கையின் மொத்த சனத்தொகையுடன் ஒப்பிடும்போது அரசாங்கதுறையில் அடையாளம் காணபட்ட தொழில் வகுதிகளில் சிலவற்றில் அனுமதிக்கப்பட்ட பதவியணியின் விகிதாசாரம் பின்வருமாறு.

**அட்டவணை 3.1 சனத்தொகையோடு ஒப்பிடுகையில் அரச சேவையில் இணங்கானப்பட்ட சில தொழில் வகுதிகளுக்கான விகிதங்கள் - 2018**

| **மொத்த சனத்தொகை** (சுமார்) | **நிறுவனம்.'.தொழில் வகுதி** | **பதவியணி** | **மொத்த சனத்தொகை : பதவியணி** வீகிதம் |
|---|---|---|---|
| 21,000,000 | முப்படைகள் | 292,401 | 71 : 1 |
| | ஆசிரியர்கள் | 237,963 | 88 : 1 |
| | இலங்கைப் பொலிஸ் | 96,185 | 218 : 1 |
| | நிறைவேற்று உத்தியொகத்தர்கள் | 52,541 | 399 : 1 |
| | இலங்கை மருத்துவச் சேவை உத்தியொகத்தர்கள | 26,223 | 800 : 1 |
| | இலங்கை பொறியியல் சேவை உத்தியொகத்தர்கள | 1,488 | 14,112 : 1 |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

**3.2 அரச சேவையாளர் பணியாட்தொகுதி தொடர்பான காலாண்டுத் தகவல்கள்**

2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய பணியாட்தொகுதியை ஆட்சேர்ப்புச் செய்தல், பணியாளர் பதவி விலகல், பதவியை விட்டுப்போதல், பணியாளர் நீக்கப்படுதல், ஓய்வு பெறுதல் மற்றும் மரணித்தல் போன்ற காரணங்களால அரச துறையின் பணியாட்தொகுதியில் ஏற்படும் மாற்றங்களை தெரியப்படுத்தி அந்தத் தகவல்களை இற்றைப்படுத்தி காலாண்டு ரீதியாக தரவுத் தொகுதியொன்றை கொண்டு நடாத்தும் பொறுப்பு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதற்கேற்ப ஆட்சேர்ப்புச் செய்தல், பதவி விலகல், பதவியை விட்டுப் போதல், சேவையிலிருந்து நீக்கப்படுதல், ஓய்வு பெறுதல் மற்றும் மரணித்தல் போன்ற காரணங்களால் பணியாட்தொகுதி எண்ணிக்கையில் ஏற்படும் மாற்றங்களை உள்ளடக்கி 2018.10.01 ஆம் திகதியிலிருந்து 2018.12.31 ஆம் திகதி வரையான 4 ஆம் காலாண்டுக்கும் உரியதாக இற்றைப்படுத்தப்பட்ட பணியாட்தொகுதித் தகவல்களை அமைச்சரவை அறிந்துகொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.2 அரச பிரிவில் 3 ஆம் மற்றும் 4 ஆம் காலாண்டுகளுக்கு பணியாட்தொகுதியில் ஏற்பட்ட மாற்ற எண்ணிக்கை.**

புதவியணி எண்ணிக்கை

| | 3 ஆம் காலாண்டு | 4 ஆம் காலாண்டு |
|---|---|---|
| ஆட்சேர்ப்பு | 13,837 | 9,863 |
| பதவியுயர்வு | 17,875 | 12,801 |
| இரட்டைத்தன்மை அடிப்படையில் பணியாற்றுதல் | 6,581 | 6,687 |
| ஓய்வு பெறுதல் | 5,097 | 5,484 |
| பணியாளர் பதவி விலகல் | 1,093 | 1,150 |
| புதவியை விட்டுச் செல்லல் | 1,706 | 991 |
| இறப்பு | 298 | 251 |
| சேவையிலிருந்து நீக்கப்படுதல் | 881 | 940 |

மூலம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

# 4. சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் முகாமைத்துவம்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளிடையே அரசாங்கத் துறையில் சம்பளம், மிகை ஊதியம், ஊக்குவிப்புத் திட்டங்கள், நலன்புரித் திட்டங்கள் மற்றும் வேறு ஊதியம் தொடர்பான தொகுதிகளை முகாமை செய்யும் பணியும் மிகவும் முக்கியமானதாக விளங்குகின்றது. இச்செயற்பாட்டின் போது தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழு, பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு, அரச தொழில் முயற்சிகள் திணைக்களம் மற்றும் தேசிய வரவுசெலவுத் திணைக்களம் ஆகிய நிறுவனங்களின் அவதானிப்புக்களையும் சிபாரிசுகளையும் கவனத்திற்கொண்டு உரிய தீர்மானங்களை வழங்குவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அதேபோன்று சம்பள மற்றும் ஊதியங்கள் தொடர்பான நடைமுறைப் பிரச்சினைகள் எழுகின்ற சந்தர்ப்பங்களில் அமைச்சுக்கள், திணைக்களங்களிடமிருந்து கிடைக்கின்ற கோரிக்கைகளுக்குத் தேவையான அறிவுறுத்தல்கள் மற்றும் தெளிவுகள் வழங்கும் செயற்பாடும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கேற்ப, 2018 ஆம் ஆண்டில் பின்வரும் சுற்றறிக்கைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.1 முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கைகள் - 2018**

| | | |
|---|---|---|
| 01 | 2018.04.11 திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 02/2016 (ii) | அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் முழுமையாக அரசுக்கு சொந்தமான கம்பனிகளின் ஊழியர்களின் சம்பளங்களை திருத்துதல் - 2016 |
| 02 | 2018.06.07 திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 02/2016 (iii) | அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் முழுமையாக அரசுக்கு சொந்தமான கம்பனிகளின் ஊழியர்களின் சம்பளங்களை திருத்துதல் - 2016 |
| 03 | 2018.07.18 திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 03/2018 | அரச துறையிலுள்ள நிறுவனங்களுக்கு பதவியணியை ஆட்சேர்ப்புச் செய்தலும் சம்பளங்கள் மற்றும் படிகளைச் செலுத்துதலும் |
| 04 | 2018.11.21 திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 04/2018 | அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் முழுமையாக அரசுக்கு சொந்தமான கம்பனிகளில் வேலையில் ஈடுபட்டுள்ள பெண் உத்தியோகத்தர்களுக்கு கருவளத்திற்காக சிகிச்சை பெற்றுக்கொள்வதற்கு சம்பளமற்ற லீவுகளை வழங்குததல். |

அரச துறையிலுள்ள அலுவலர்களின் எண்ணிக்கை தொடர்பாக ஆர்வம் காட்டுகின்ற ஒவ்வொரு நபருக்கும் பொது மக்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கில் **2018 ஆம் ஆண்டில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வெளியீடுகள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளன.** அத்தகைய வெளியீடுகளை www. Treasury.gov.lk / web/ department – management – services/ links இனூடாக தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

# 5. ஆய்வு, அவதானிப்புக்களை முன்வைத்தலும் குழுப் பிரதிநிதித்துவமும்

## 5.1 ஆய்வுச் செயற்பாடுகள்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளில் அரசாங்க துறையின் ஊழியர் எண்ணிக்கைகளுடன் தொடர்புடைய மறுசீரமைப்புக்களை அறிமுகப்படுத்துதல், அரசாங்க நிறுவனங்களை மீள் கட்டமைத்தல், போதிய ஊழியர் தொகையைப் பேணி வருதல், அரசாங்க துறையின் பதவியணி தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட அளவீடுகளையும் தர நியமங்களையும் உருவாக்குதல், சம்பளங்கள், படிகள் மற்றும் ஏனைய ஊதியங்கள் தொடர்பில் ஆய்வு செய்து அவதானிப்புக்களையும் சிபாரிசுகளையும் சமர்ப்பித்தல், தீர்மானங்களை வழங்குதல், சமகால அபிவிருத்தித் தேவைகளுக்குப் பொருத்தமானவாறு அரசாங்கத் துறையில் பல்வேறு சேவைகளுக்கான சேவைப் பிரமாணக் குறிப்புக்களையும் சேவை நிபந்தனைகளையும் மீளாய்வு செய்கின்ற போது தேவையான அவதானிப்புக்களையும் சிபாரிசுகளையும் சமர்ப்பித்தல் போன்ற சந்தர்ப்பங்களில் திணைக்களம் ஏனைய நிறுவனங்களுடன் நெருக்கமான முறையில் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியேற்படுகின்றது.

இச்செயற்பாடுகளை உயர்தரத்துடனும் வினைத்திறனுடனும் மேற்கொள்வதற்கு இத்திணைக்களத்தில் ஆய்வுப் பிரிவு ஒன்று தாபிக்கப்பட்டுள்ளது. திணைக்களத்தின் பணிகளைப் பயனுறுதிவாய்ந்த முறையில் மேற்கொள்கின்ற போது தேவைப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களை எடுப்பதற்கான தகவல் சேகரித்தல் மற்றும் அத்தகவல்களைப் பகுப்பாய்வு செய்து அவதானிப்புக்களுடனும் பரிந்துரைகளுடனும் அறிக்கை சமர்ப்பித்தல் என்பன ஆய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள முக்கியமான பணிகளாகும். இதன் போது தேவையான விசாரணைகளுக்கான/ ஆய்வுகளுக்கான ஆய்வுப் பிரிவின் உத்தியோகத்தர்கள் குறித்த நிறுவனங்களுக்கு தனிப்பட்ட முறையில் அனுப்பப்பபட்டு தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன.

## 5.2 அமைச்சரவைப் பத்திரங்களுக்கான அவதானிப்புக்களை முன்வைத்தல்

அரச துறையின் தாபனச் செயற்பாடுகள், சம்பளங்கள் மற்றும் படிகள் போன்ற இத்திணைக்களத்தின் விடயப் பரப்புக்குள் அடங்குகின்ற விடயங்கள் தொடர்பில் முன்வைக்கப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கான அவதானிப்புக்களை முன்வைப்பதும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முக்கிய பணிகளில் ஒன்றாகும். 2018 ஆம் ஆண்டில் திணைக்களத்தினால் அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரங்கள் மற்றும் அவை அடங்கும் விடயப்பரப்பு என்பன தொடர்பான விபரங்கள் அட்டவணை 5.1 இல் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை 5.1 அமைச்சரவைப் பத்திர அவதானிப்புகளை வகைப்படுத்தல் -2018**

| தொடர் இல | துறை /விடயம் | விஞ்ஞாபனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பதவிகளுக்கு நியமித்தல்/ஆட்சேர்ப்புச் செய்தல். | 256 |
| 2. | சேவையை நீடித்தல் | 93 |
| 3. | புதிய பதவிகளை உருவாக்குதல் | 38 |
| 4. | ஊதியம் | 10 |
| 5. | சேவைப் பிரமாணக் குறிப்புக்கள் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைவிதிகள் | 9 |
| 6. | ஒழுக்காற்றுச் செயற்பாடுகள் | 1 |
| 7. | ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் | 31 |
| 8. | ஏனையவை | 151 |
| **மொத்தம்** | | **591** |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

2018 ஆம் ஆண்டில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அவதானிப்புக்கள் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்களில் நியமனங்கள் வழங்குதல், சேவையை நீடித்தல், ஊதியம் தொடர்பான விடயங்கள் என்பன முக்கியமாக அமைந்தன. அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கான அவதானிப்புக்களை வழங்கியது தவிர, நாளாந்தம் நடைபெறும் தாபனச் செயற்பாடுகள் தொடர்பான அமைச்சரவை உப குழுக் கூட்டங்களிலும் திணைக்களம் பங்கேற்றது.

2008 - 2018 வரையான காலப் பகுதியில் திணைக்களத்தினால் அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் தொடர்பான ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் அட்டவணை 5.2 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 5.2 அமைச்சரவைப் பத்திரங்களுக்கான அவதானிப்புக்களை முன்வைத்தல்**

| வருடம் | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அவதானிப்புக்கள் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்களின் எண்ணிக்கை | 750 | 1272 | 1598 | 1019 | 399 | 499 | 449 | 537 | 605 | 747 | 591 |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

### 5.3 குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தல், ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள் மற்றும் தொடர்பாடல்

அபிவிருத்தி மற்றும் தாபனச் செயற்பாடுகள் தொடர்பில் பின்வரும் மாநாடுகளிலும் கலந்துரையாடல்களிலும் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு மற்றும் திறைசேரி செயலாளர் மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் ஆகியோரைப் பிரதிநிதித்துவம் செய்து செயலூக்கத்துடன் பங்கேற்றனர்.

- தாபன விடயங்களுக்கான அமைச்சரவை உப குழு
- அமைச்சரவையினால் திணைக்களத்தின் பிரதிநிதிகள் அடங்கலாக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் குழுக்கள்
- அரச கணக்குகள் குழு (COPA)
- அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (COPE)
- மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர் மாநாடுகள்
- மாகாண பிரதம செயலாளர்களின் மாநாடுகள்
- தேசிய சம்பளங்கள் பதவியணி ஆணைக்குழுவினுடனான கலந்துரையாடல்கள்
- செயற்திட்ட முன்னேற்ற மீளாய்வு மற்றும் வழிநடத்திச் செல்லும் குழுக்கள் (Steering)
- நியதிச்சட்ட நிறுவனங்களின் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் மற்றும் முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள்
- பெறுகைகள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள்

மேலும், பல்வேறு நிறுவனங்களின் கோரிக்கையின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைச் சபை அங்கத்தவர்கள் என்ற வகையிலும் இத்திணைக்களதத்தின் அங்கத்தவர்கள் பங்கேற்றனர். அதேபோல அரசாங்க நிறுவனங்களின் பதவியணி முரண்பாடுகள் தொடர்பில் உரிய அதிகாரிகளுடன் தொடர்ச்சியான முறையில் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. இவ்வாறு அரசாங்கத் துறையில் வினைத்திறன்மிக்க மனித வள முகாமை முறையொன்றை உருவாக்கும் நோக்கில் பயனுறுதிவாய்ந்த தொடர்பாடல் முறையொன்றைப் பேணி வருவதற்கு திணைக்களம் தொடர்ச்சியாக நடவடிக்கை எடுத்து வருகின்றது.

# 6. தாபனப் பிரிவு

6.1 **பதவியினரின் தகவல்கள்** - 2018

**அட்டவணை – 6.1 2018.12.31 ஆம் திகதியில் உள்ளவாறான பதவியினரின் தகவல்கள்**

| தொடர் இல | பதவி | அனுமதிக்கப்பட்ட | உண்மையான | வெற்றிடம் |
|---|---|---|---|---|
| 1. | பணிப்பாளர் நாயகம் | 1 | 1 | 0 |
| 2. | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | 2 | 2 | 0 |
| 3. | பணிப்பாளர் | 8 | 7 | 1 |
| 4. | மனிதவள முகாமைத்துவ வல்லுனர் | 1 | 0 | 1 |
| 5. | வேலை ஆய்வு நிபுணர் | | | |
| 6. | புள்ளிவிபரவியல் | 1 | 0 | 1 |
| 7. | உதவி / பிரதி பணிப்பாளர் | 8 | 6 | 2 |
| 8. | கணக்காளர் | 1 | 1 | 0 |
| 9. | உதவி பணிப்பாளர் (தகவல் தொடர்பாடலும் தொழிநுட்பம்) | 1 | 1 | 0 |
| 10. | நிர்வாக உத்தியோகத்தர் | 1 | 1 | 0 |
| 11. | மொழி பெயர்பாளர் | 1 | 1 | 0 |
| 12. | பரிசோதக உதவியாளர் | 1 | 1 | 0 |
| 13. | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 6 | 6 | 0 |
| 14. | தகவல் தொழிநுட்ப உதவியாளர் | 1 | 1 | 0 |
| 15. | அரச முகாமைத்துவ உதவியாளர் | 33 | 34 | -1 |
| 16. | சாரதி | 10 | 10 | 0 |
| 17. | அலுவலக உதவியாளர் | 8 | 8 | 0 |
| | **மொத்தம்** | **85** | **80** | **6/1** |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை வினைத்திறனுடனும் பயனுறுதிமிக்க முறையிலும் நிறைவேற்றுவதற்கு திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் தொழில் திருப்தியை உச்ச அளவில் வைத்திருப்பது அவசியமாகும். திணைக்களத்தின் பௌதீக சூழலை, தொழிற் திருப்தியை அதிகரிக்கக்கூடிய நட்புறவான அலுவலக சூழலொன்றாக உருவாக்குவதற்கும் ஓர் அணியாகச் செயற்படும் போது ஏனைய பதவியினருக்கும் அவசியமான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கும் தாபனப் பிரிவு நடவடிக்கை எடுத்தது.

2018 ஆம் ஆண்டில் திணைக்களத்திடம் காணப்பட்ட மனித மற்றும் பௌதீக வளங்களை உச்ச அளவில் வினைத்திறனுடனும் பயனுறுதியுடனும் பயன்படுத்துவதன் ஊடாக திணைக்களத்திடம் எதிர்பார்க்கப்படும் சேவைகளைத் தடங்கலின்றி நிறைவேற்றுவது சாத்தியமாகின்றது. 2018.12.31 ஆந் திகதி திணைக்களத்தின் மொத்தப் பதவியனி தொடர்பான தகவல்கள் அட்டவணை 6.1 இல் தரப்பட்டுள்ளன.

## 6.2 வயதுப் பிரிவின் அடிப்படையில் பணியாள் தொகுதியினரை வகைப்படுத்தல்

**அட்டவணை 6.2 : வயதுப் பிரிவின் அடிப்படையில் பணியாட்தொகுதியினரை வகைப்படுத்தல்** - 2018

| தொடர் இலக்கம் | வயதுப் பிரிவு | பெண் | ஆண் |
|---|---|---|---|
| 1. | 25 , | 01 | 00 |
| 2. | 26-35 | 08 | 06 |
| 3. | 36-45 | 18 | 19 |
| 4. | 46-50 | 07 | 09 |
| 5. | 51-55 | 02 | 10 |
| 6. | 55 < | 00 | 00 |
| மொத்தம் | | **36** | **44** |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

## 6.4 பயிற்சி நிகழ்ச்சிகள்

### 6.4.1 உள் நாட்டுப் பயிற்சி நிகழ்ச்சிகள்

திணைக்கள உத்தியோகத்தர்களின் செயலாற்றுகை விருத்திக்காகப் பயிற்சி நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டு நடாத்தும் நோக்கில் திணைக்களத்திற்கான வருடாந்த பயிற்சித் திட்டம் தயாரிக்கப்படுகின்றது. திணைக்கள உத்தியோகத்தர்களின் தேவைகளுக்கு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளும் இந்த வருடாந்த பயிற்சித் திட்டத்தை தயாரிக்கும் போது கவனத்திற் கொள்ளப்படுகின்றன. அதன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் திணைக்களத்தினுள் வழங்கப்பட்ட பயிற்சிகள் அட்டவணை 6.3 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 6.3 : உள்நாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்றல் - 2018

| தோடர் இல | Field of Training | பயிற்சி நிறுவனம் | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | Diploma in Public Procurement and Contract Administration (DIPPCA) 3rd Intake. | மினோல்டா நிறுவனம் | 02 |
| 2 | சான்றிதழ் பாடநெறி ஆங்கில மொழி - 2018. | மினோல்டா நிறுவனம் | 06 |
| 3 | ஆங்கில மொழி டிப்ளோமா பாடநெறி - 2018. | மினோல்டா நிறுவனம் | 04 |
| 4 | சான்றிதழ் பாடநெறி தமிழ் மொழி - 2018. | மினோல்டா நிறுவனம் | 02 |
| 5 | பட்டப்படிப்பு பாடநெறி பொருளாதார திணைக்களம் | கொழும்பு பல்கலைகழகம் | 01 |
| 6 | அரச அலுவலர்களுக்கான தாபன கோவை தொடர்பாக தெளிவூட்டல் பாடநெறி (பதவிநிலை) | பொது நிர்வாகம் மற்றும் அனர்த்த முகைமைத்துவ அமைச்சு | 01 |
| 7 | புத்தக பிணைப்பு (பைண்டிங்) பாடநெறி | தேசிய சுவடிகள் காப்பக திணைக்களம் | 01 |
| 8 | PHP-MySQL Web Development Programme. | இலங்கை தகவல் தொழ்நுட்ப நிறுவனம் | 01 |
| 9 | Essence of public Procurement Management. | மினோல்டா நிறுவனம் | 01 |
| 10 | Speechcraet Training with Toastmasters International for Special Grade Officers of all Island Services. | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் | 01 |
| 11 | Commputerized Government Payroll System. | மினோல்டா நிறுவனம் | 03 |
| 12 | பொது நிர்வாகம் தொடர்பான பட்டப்படிப்பு பாடநெறி | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் | 01 |
| 13 | அரச அலுவலர்களுக்கான தாபன கோவை தொடர்பாக தெளிவூட்டல் பாடநெறி | பொது நிர்வாகம் மற்றும் அனர்த்த முகைமைத்துவ அமைச்சு | 03 |
| 14 | Formal Letter Writing Skills. | மினோல்டா நிறுவனம் | 01 |
| 15 | Disciplinary Procedures in the Public Sector. | மினோல்டா நிறுவனம் | 04 |

### 6.2.2 வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சிகள்

இத்திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புக்களை வழங்கி அவர்களின் அனுபவங்களையும் விடய அறிவையும் விருத்தி செய்வதற்காக 2018 ஆம் ஆண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டன.

அட்டவணை - 6.4 வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்றல் - 2018

| தொடர் இல | பெயர் | புதவி | பாடநெறி | நாடு | காலம் |
|---|---|---|---|---|---|
| 1. | திருமதி. A.U.K தொடங்வல | பணிப்பாளர் | PIM International Management Programme | இந்தனோசியா | 2018.01.28<br>2018.02.04 |
| 2. | திருமதி. . W.D. சேபாலிகா. | உதவி பணிப்பாளர் | Workshop on Impelenting Sustainable E-Government Solutions | சிங்கபூர் | 2018.02.25<br>2018.03.04 |
| 3. | செல்வி. . S.L.M. விமலசூரிய | உதவி பணிப்பாளர் | | | |
| 4. | திருமதி. . B.M.D.N. பாலசூரிய | பணிப்பாளர் | PIM International Programme in Management | நியூசிலாந்து | 2018.03.25<br>2018.04.01 |
| 5. | திருமதி. . P.L.J. குணரத்ன | பணிப்பாளர் | | | |
| 6. | திருமதி. K.D.I.S.K. சிறிவர்தன. | கணக்காளர் | International Programme on Stratergic Management | இந்தனோசியா | 2018.04.21<br>2018.04.30 |
| 7. | திரு . M. கோபாலரத்தினம் | உதவி பணிப்பாளர நாயகம் | | | |
| 8. | செல்வி. . R.M.K சஞ்ஜீவனீ | உதவி பணிப்பாளர் | பட்டப்படிப்பு பாடநெறி பொருளாதார திணைக்களம் | ஜப்பான் | 2018.08.12<br>2018.08.31 |
| 9. | திருமதி. . B.M.D.N. பாலசூரிய. | பணிப்பாளர் | Second Country Study visit – Capacity Building Trainig Programme for Class I Officers of the Sri Lanka Administratine Service | மலேசியா | 2018.09.17<br>2018.09.23 |
| 10. | செல்வி. . S.L.M. விலமசூரிய | உதவி பணிப்பாளர் | 2018 Seminaar on Aid for Trade for Senior Officials of Developing Countries | சீனா | 2018.10.16<br>2018.10.29 |

| தொடர் இல | பெயர் | புதவி | பாடநெறி | நாடு | காலம் |
|---|---|---|---|---|---|
| 11 | திருமதி. துமரா டீ பெரேரா | உதவி பணிப்பாளர நாயகம் | Public Administration E- Government | சீனா | 2018.11.05 2018.11.27 |
| 12 | K.M.D.L.T. பீரீஸ் | உதவி பணிப்பாளர் | | | |
| 13 | திருமதி. K.D.I.S.K. சிறிவர்தன | கணக்காளர் | Semimar on Management of China's Assistance Projects and Related Financial Servces for Devoloping countries | சீனா | 2018.11.08 2018.12.01 |
| 14. | செல்வி. S.L.M. விமலசூரிய | உதவி பணிப்பாளர் | ADIB E- Learning course 2018 | ஜப்பான் | 2018.11.12 2018.11.14 |
| 15. | திருமதி. S.H.D களுதந்ரி | பணிப்பாளர் | PIM Intenationam Menagement Programme | தாய்லாந்து | 2018.08.12 2018.08.31 |

# 7. நிதிப் பிரிவு

2018 ஆம் ஆண்டில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் செயற்பாட்டு நிகழ்ச்சியின் கீழ் மனித வள முகாமைச் செயற்திட்டத்திற்காக செலவுத் தலைப்பு 242 இற்கு ஒதுக்கப்பட்ட தொகை 87,110,000 ரூபாவாகும். உண்மையாக ஏற்பட்ட செலவினம் ரூபா 81,821,452 ஆகும். அதன் அடிப்படையில் ஒதுக்கப்பட்ட தொகையில் நூற்றுக்கு தொன்னூற்றி ஒன்று தசம் ஏழு ஒன்று வீதம் (93.92%) திணைக்கத்தின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக சிக்கனமாகப் பயன்படுத்தப்பட்டது. நிதி முன்னேற்ற அறிக்கை அட்டவணை 7.1 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை – 7.1 நிதி முன்னேற்றம் 2017 - 2018**

| செலவு விபரம் | | 2017 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீடு (ரூபா) | மொத்தச் செலவு (ரூபா) | செலவுகளின் சதவீதம் (மூ) | அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீடு (ரூபா) | மொத்தச் செலவு (ரூபா) | செலவுகளின் சதவீதம் (மூ) |
| **மீண்டுவரும் செலவினம்** | | **72,363,300** | **66,207,221** | **91.49** | **80,535,000** | **78,885,383** | **97.95** |
| **ஆளுக்குரிய வேதனாதிகள்** | | **52,466,000** | **48,185,027** | **91.84** | **54,785,000** | **53,949,515** | **98.47** |
| 1001 | சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் | 29,004,000 | 27,583,880 | 95.10 | 32,750,000 | 32,657,685 | 99.71 |
| 1002 | மேலதிக நேர மற்றும் விடுமுறைக் காலச் சம்பளம் | 1,432,000 | 1,093,832 | 76.38 | 1,750,000 | 1,607,966 | 91.88 |
| 1003 | ஏனைய படிகள் | 22,030,000 | 19,507,297 | 88.55 | 20,285,000 | 19,683,864 | 97.03 |
| **பிரயாணச் செலவுகள்** | | **341,000** | **155,354** | **45.55** | | | |
| 1101 | உள்நாட்டு | 130,000 | 124,616 | 95.86 | 250,000 | 164,258 | 65.70 |
| 1102 | வெளிநாட்டு | 211,000 | 30,737 | 14.57 | 2,052,000 | 2,050,568 | 99.93 |
| **வழங்கல்கள்** | | **6,132,000** | **5,464,132** | **89.10** | | | |
| 1201 | காகிதாதிகள் மற்றும் அலுவலகத் தேவைகள் | 2,600,000 | 2,516,124 | 96.77 | 3,050,000 | 3,004,984 | 98.52 |
| 1202 | எரிபொருள் | 2,932,000 | 2,506,669 | 85.49 | 3,235,000 | 3,185,626 | 98.47 |
| 1203 | உணவு, குடிபானங்கள் மற்றும் சீருடை | 100,000 | 64,000 | 64.00 | 65,000 | 64,000 | 98.46 |
| 1205 | ஏனையவை | 500,000 | 377,339 | 75.47 | 350,000 | 235,714 | 67.34 |
| **பராமரிப்புச் செலவுகள்** | | **1,502,000** | **1,361,130** | **90.62** | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1301 | வாகனங்கள் | 1,132,000 | 1,059,810 | 93.62 | 1,450,000 | 1,421,085 | 98 |
| 1302 | இயந்திரங்கள் மற்றும் பொறித்தொகுதி | 370,000 | 301,320 | 81.44 | 300,000 | 290,624 | 96.87 |
| **சேவைகள்** | | **10,622,300** | **9,859,299** | **92.81** | | | |
| 1401 | போக்குவரத்து | 2,050,000 | 2,044,307 | 99.72 | 2,935,000 | 2,914,366 | 99.29 |
| 1402 | தபால் மற்றும் தொலைத் தொடர்பு | 1,886,000 | 1,645,024 | 87.22 | 2,000,000 | 1,888,391 | 94.41 |
| 1405 | ஏனையவை | - | - | - | | | |
| 1048 | இயக்க குத்தகை | 5,643,300 | 5,418,012 | 96.01 | **7,793,000** | **7,540,728** | **96.76** |
| 1049 | ஏனைய | 1,043,000 | 751,957 | 72.10 | 970,000 | 905,535 | 93.35 |
| **மாற்றல்** | | **1,200,000** | **1,167,278** | **97.27** | | | |
| 1506 | அரசாங்க உத்தியோகத்தர் களுக்கான ஆதனக் கடன் வட்டி | 1,200,000 | 1,167,278 | 97.27 | 1,300,000 | 1,269,988 | 97.69 |
| **ஏனைய** | | **100,000** | **15,000** | **15.00** | | | |
| 1703 | அரச மொழிக் கொள்கையை நடைமுறைப் படுத்தல் | 100,000 | 15,000 | 15.00 | - | - | - |
| **மூலதனச் செலவுகள்** | | **3,834,000** | **3,676,461** | **95.89** | | | |
| **மூலதனச் சொத்துக்களுக்கான புனரமைப்பு மற்றும் மேம்பாடு** | | **920,000** | **919,665** | **99.96** | | | |
| 2002 | இயந்திரங்கள் மற்றும் பொறித்தொகுதி | - | - | - | 200,000 | 77,110 | 38.55 |
| 2003 | வாகனங்கள் | 920,000 | 919,665 | 99.96 | 1,000,000 | 496,910 | 49.69 |
| **மூலதனச் சொத்துக்களின் கைக்கொள்ளல்** | | **1,500,000** | **1,348,142** | **89.87** | | | |
| 2102 | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 1,500,000 | 1,348,142 | 89.88 | | | |
| 2106 | மென்பொருள் மேம்பாடு | - | - | - | 2,000,000 | - | - |
| **திறன் விருத்தி** | | **1,414,000** | **1,408,655** | **99.62** | **-** | **-** | **-** |
| 2401 | பணியாட் தொகுதிப் பயிற்சி | 1,414,000 | 1,408,655 | 99.62 | 2,375,000 | 2,322,430 | 97.78 |
| **முழு மொத்தம்** | | **76,197,300** | **69,883,682** | **91.71** | **87,110,000** | **81,821,452** | **93.92** |

மூலம்: முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்